# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 14 செவ்வாய்க்கிழமை (27-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 52


## தலதா மாளிகைக்கு வர்ணம் பூசும் ஒப்பந்தக்காரர் தலைமறைவானார்!

### கட்டடத் தொழிலாளர் போல வந்தே தாக்குதல்

கொழும்பு, ஜன. 27

கண்டி தலதா மாளிகையின் வெளிச் சுவர்களுக்கு வர்ணம் பூசும் வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வந்த தமிழர் ஒருவர் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலையாளிகள் கட்டடத் தொழிலாளர்கள் போன்று வேடமிட்டே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறியை அப்பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளனர் என்றும் —

அந்த லொறியில் தச்சு வேலைக்கான உபகரணங்களும், மண்வெட்டி மற்றும் கட்டட வேலைக்கான பொருள்களும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் இருந்து கண்டிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு லொறி குறித்து ஏற்கனவே சகல சோதனை நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் கடும் சோதனைச் சாவடிகளைத் தாண்டி அந்த லொறி தலதா மாளிகைப் பகுதிக்குச் சென்றது எப்படி என்பது குறித்து புலனாய்வு விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. [ஐ-21]

முப்படையினரின் ஒத்துழைப்புடன்

## ஜனாதிபதி தலைமையில் புனரமைப்புப் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 27

குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த தலதாமாளிகையைப் புனரமைக்கும் பணிகள் ஜனாதிபதியின் தலைமையில் நேற்று ஆரம்பமாகின.

இப்புனரமைப்புத் திட்டத்துக்காக ஜனாதிபதி இரண்டு கோடி ரூபாவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கியுள்ளார்.

இப்புனரமைப்புப் பணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துக்கம் அனுஷ்டிக்க ஸ்ரீமா வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 27

கண்டி தலதாமாளிகையில் இடம்பெற்ற அனர்த்தத்துக்காக சிங்கள பௌத்தர்கள் அனைவரும் 31 ஆம் திகதி சனிக்கிழமையைத் துக்க நாளாக அனுஷ்டிக்குமாறு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மது மாமிசம் அருந்தாமல் சமய வைபவங்களில் மட்டும் பங்குபற்றி அன்றைய தினத்தை அமைதியானமுறையில் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறும் —

மது விற்பனை நிலையங்களை அன்று மூடிவிடுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-9-10)

### மகாபோதியின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 27

அநுராதபுரத்தில் புனித வெள்ளரசுமரம் அமைந்துள்ள மகாபோதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# -- புலிகள் இயக்கம் --

# தடை செய்யப்பட்டது!

## நேற்று அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 27

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத இயக்கமாகக் குறிப்பிட்டு அந்த இயக்கம் தடை செய்யப்படுவதாக ஸ்ரீலங்கா அரசு நேற்று அறிவித்தது.

இது தொடர்பான ஒரு வரித் தகவலை அரச செய்தி தொடர்பு சாதனங்கள் நேற்றிரவு விசேடமாக அறிவித்தன.

இந்தத் தடை உத்தரவு தொடர்பான விஷேட வரித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தடை உத்தரவை மீளாய்வு செய்க!

### ரெலோ கோருகின்றது

புலிகள் இயக்கத்தை அரசு தடை செய்ததை வன்மையாகக் கண்டித்துள்ள ரெலோ இயக்கம் அந்த முடிவை மறுபரிசீலனை செய்யும் படிகோரியிருக்கின்றது.

"இது அரசாங்கத்தின் பதற்றமான முடிவையே காட்டுகின்றது! புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்துவதற்கான கதவுகளை இத்தடை நிரந்தரமாக மூடிவிடுகிறது. எனவே இந்தத் தடை உத்தரவு குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்-" என ரெலோ இயக்க முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் நேற்றிரவு தெரிவித்தார். (உ-9)

## தடையால் அரசுக்கு பயனேதும் இல்லை

### டக்ளஸ் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 27

புலிகளைத் தடை செய்திருக்கும் அரசின் உத்தரவு பிரயோசனமற்றது. எந்தப் பயனையும் தராதது. சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் அரசியல் முயற்சியாக அரசு இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு நேற்றிரவு கருத்துத் தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியான கட்டமைப்புடன் வெளிப்படையாக செயற்படும் ஓர் அமைப்புக்கு அல்லது கட்சிக்கு இத்தடை ஏதும் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் புலிகள் போன்ற தலைமறைவு இயக்கங்களுக்கு இத்தடை புதிய அழுத்தம் எதனையும் தரப்போவதில்லை. இத்தடையால் அரசுக்கு பயனேதும் கிடைக்கப்போவதில்லை என்றார் அவர். (உ-9)

## படையினருடன் இணைந்து நாம் புலி வேட்டையில் ஈடுபடவில்லை

### ஈ. பி. டி. பி. விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 27

ஈ. பி. டி. பியினராகிய நாங்கள் இலங்கையின் எப்பாகத்திலும், எக்காலத்திலும் படையினருடன் இணைந்து புலிவேட்டையில் ஈடுபட்டதில்லை. புலிகளுடன் எமக்குள்ள முரண்பாடுகளை அரசியல் ரீதியாகவே சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

ஈ. பி. டி. பியினர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புங்குடுதீவில் எமது கட்சி உறுப்பினர்கள் ஒன்பது பேர் சகோதர படுகொலைக்கு 23 - 01 - 1998 உட்படுத்தப்பட்டிருந்தனர். இதை புலிகள் உரிமை கோரியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் இரு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன படையினரின் உறவினர் நேற்று ஆர்ப்பாட்டம்!

### செஞ்சிலுவை அலுவலகம் மீது கல் வீச்சு!

கொழும்பு, ஜன. 27

முல்லை. முகாம் தகர்ப்பு மற்றும் சமர்களின் போது காணாமல் போன படையினரின் உறவினர்கள் உள்ளடங்கிய — சுமார் நானூறு பேரைக் கொண்ட — கூட்டம் ஒன்று நேற்றுக் காலை பம்பலப்பிட்டி லயரட்ஸ் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்புத் தலைமையகத்திற்கு முன்னால் பதாகைகளைத் தாங்கியவாறு ஒன்று கூடி, சுலோகங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்து, செஞ்சிலுவை அலுவலகம் மீது கற்களையும் வீசியது.

காலையில் 9-30 மணிக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தத் தொடங்கியதும் அவர்களின் ஐந்து பிரதிநிதிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதிநிதி மக்கீல் ஹெட்ரன் தமது அலுவலகத்துக்குள் அழைத்துப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு அதிரடிப் படையினர் கிழக்கில் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஜன. 27

அக்கரைப்பற்று — பொத்துவில் வீதி, கோமாரி அறுபதாம் கட்டையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் சப்இன்ஸ்பெக்டர் உட்பட 5 விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர்; மற்றைய இரு படையினர் காயமுற்றனர்.

வீதி கண்காணிப்பு முடித்துக் கொண்டு முகாம் திரும்பிக் கொண்டிருந்த படையினரே இத்தாக்குதலுக்கு இலக்காகினர்.

இச் சம்பவத்தில் மற்றுமோர் சப்இன்ஸ்பெக்டர் காயமடைந்துள்ளார்.

ரி - 56 ரைபிள் — 2, ரி - 82 ரக ரைபிள் — 2 உட்பட ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயன்ஸ் கழக இலவச சிகிச்சை

தென்மராட்சி, ஜன. 27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நேற்றுமுனதினம் கைதடி அறிவழிச் செயலகத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் கண்ணில் பாதிப்பு ஏற்பட்ட 70 பேரும் —

நீரிழிவினால்பீடிக்கப்பட்ட மூவரும் —

தொழுநோயினால் பீடிக்கப்பட்ட மூவரும் —

கண் விழிவெண்படலத்தில் பூப்படர்ந்த [கற்றாக்] ஐந்து பேரும் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

[இ-117]

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை அருணாசலம்

(A. M R — நல்லூர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை அருணாசலம் (A M R) நேற்றுக் காலை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிரூபன், ரூபன்மதி, மாதவரூபன் (ரகு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணாவின் அன்பு மாமனாரும், நமசிவாயத்தின் அன்புச் சகோதரனும், சிவஞானத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-01-1998 இன்று காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மதிரூபன், ரகு
(பிள்ளைகள்)

17/37, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர்.

(சி/2712)

## ஆறுமுகம் கெந்தீஸ்வரன்

(முன்னாள் பரிசோதகர் இ. போ. ச.)

அச்சுவேலி இராச வீதியைப் பிறப்பிடமாகவும், உடுவில் அம்பலவாணர் வீதி, சுற்பொக்கணையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கெந்தீஸ்வரன் 26-01-98 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிவபாக்கியத்தின் (ஆசிரியை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் சேதுப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், சங்கரப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் மருமகனும், கோகுலன் (பகுதிநேர விரிவுரையாளர் தொ. நு. கல்லூரி, திருமலை), அகிலன் (வன்னி), சிவதீசன் (1 ஆம் வருட பொறியியற்பீட மாணவன்), பிருந்தா (A/L மாணவி, யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இ. பரமேஸ்வரி (திருமலை), திருமதி இ. தனேஸ்வரி (ஆசிரியை, அச்சுவேலி ம வி), காலஞ்சென்ற ஆ. தனபாலகிருஷ்ணர் (ஆசிரியர், திருமலை), திருமதி இ. நகுலேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை), திருமதி நா. விமலேஸ்வரி (கனடா), திரு. ஆ எதிர்வீரசிங்கம் (கனடா), திரு. ஆ அருந்தவராசா (கனடா), திருமதி சோ. ஜெகதீஸ்வரி (கனடா), திரு ஆ. ஜெகதீஸ்வரன் (கனடா) காலஞ்சென்ற யோகேஸ்வரன் (ரஞ்சன்) ஆகியோரின் சகோதரனும், திரு. ச. இரத்தினசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர், கொழும்பு), திரு. ச. கனகரத்தினம் (கணக்காளர், கொழும்பு), திரு. ச. செல்வராசா (வர்த்தகத் திணைக்களம், திருமலை), செல்வி ச. பேரின்பநாயகி (தொலைத் தொடர்பு திணைக்களம், வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-01-98) செவ்வாய்க்கிழமை காலை 8 30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சந்தரோடை சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்

(52918)

## திருமதி கனகசபை நாகரத்தினம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகசபை நாகரத்தினம் அவர்கள் 25 1.98 அன்று கோண்டாவிலில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியாரும், புஸ்பலீலா (ஜேர்மனி), தளையசிங்கம் (இளைப்பாறிய ஊழியர், இ போ. ச., யாழ்ப்பாணம்), இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சந்திராதேவி, சிவராஜா (ஜேர்மனி), அன்னலிங்கம் (சுவிஸ்), இந்திராணி, செல்வராணி, வசந்தி (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பலிங்கம் (ஜேர்மனி), புவனேஸ்வரி, கலைவாணி (ஜேர்மனி), ஆனந்தராசா, ஜீவா (ஜேர்மனி), கமலேஸ்வரி (சுவிஸ்), சிவராசா, செல்வேந்திரன், சிறீஸ்கந்தராசா (கனடா), சண்முகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், துரையப்பா, நடராசா, காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.1 98 திங்கட்கிழமை அவரது மகன் க. தளையசிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
க. தளையசிங்கம்
(மகன்)

'குமர கோட்டம்',
கோண்டாவில்.

(49929)

# ஏ. எம். ஆர். காலமானார்

யாழ்ப்பாணம், ஜன. 27

நல்லூர் முடமாவடிப் பகுதியின் 'உதயன்' பத்திரிகை விநியோகத்தராக நீண்டகாலம் பணிபுரிந்த கனகசபை அருணாசலம் (ஏ எம். ஆர்.) (வயது 60) தமது பத்திரிகை விநியோகப் பணியை மேற்கொண்டிருந்த சமயம் நேற்றுக் காலை காலமானார்.

சில பத்திரிகைப் பிரதிகளுடன் ஆரியகுளம் சந்திக்கு அருகில் வந்து கொண்டிருந்த சமயம் தலைச்சுற்று அல்லது மார்புவலி ஏற்பட்ட நிலையில் தமது சைக்கிளுடன் ஆரிய குளத்தினுள் அவர் வீழ்ந்ததாகக் கூறப்பட்டது

மூன்று பிள்ளைகளின் தந்தையாரான ஏ. எம். ஆரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை பத்து மணிக்கு நல்லூர் பண்டாரக் குள வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (உ-ரி-5)

# சங்கீத, நடன வயலின் பயிற்சி

நெல்லியடி, ஜன. 27

புலோலி மத்தி இளைஞர் சேவை மன்றம் இணைந்து நடத்தும் சங்கீத, நடன வயலின் பயிற்சி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் புலோலி மத்தி இளைஞர் சேவை மன்ற செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-109)


நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
27-01-98 முதல்
அஜித், தேவயானி
நடித்த
காதல் கோட்டை
காட்சிகள்: 10-30, 2-30
(சி/2724)



தேவை
சுன்னாகம்
வினைஸ்
கல்வி நிலையத்திற்கு
பெண்
★ பாலராசிரியர்
★ பதிவாளர் தேவை
30-01-98 க்கு
இடையில் தினமும்
பி.ப. 3மணி — 6மணிவரை
கல்வி நிலையத்தில்
தொடர்பு கொள்ளவும்.
- நிர்வாகி
(49928)



லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
அஜித்குமார்
தேவயானி
நடித்த
'காதல் கோட்டை'
புதன் வரையும்
M.G R, ஜெயலலிதா
நடித்த
ரகசிய போலீஸ் 115
வெள்ளி, சனி
பழைய நேரம்
9-00, 12-30, 3-30
(52705)


# இளைஞரைப் பாம்பு தீண்டியது

ஊர்காவற்றுறைப் பகுதியில் பாம்பினால் கடியுண்ட இளைஞர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளையதம்பி வரன் (வயது 27) என்ற இந்த இளைஞர் தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரீ)


ஆண்டு 5 புலமைப் பரிசில் - 1998
மாதிரிப் பரீட்சை 10இல்
அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள்
★ கதிரவேல் பூர்ணிகா - 179 புள்ளி
(யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்)
★ சிவராஜசுந்தரம் கஸ்தூரி - 178 புள்ளி
(யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்)
★ குமாரசாமி சாலினி - 176 புள்ளி
(யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்)
★ கேசவன் துளசிகா - 173 புள்ளி
(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
★ ஞானகாந்தன் சுகவரதா - 163 புள்ளி
(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
வெளி மாணவர்கள்
★ நவரத்தினம் நவராஜகுமரன் - 179 புள்ளி
(யா/இந்து ஆரம்பப் பாடசாலை)
★ ஜெயகுமார் சிவானுஜா - 156 புள்ளி
(யா/இந்து ஆரம்பப் பாடசாலை)
★ ஸ்ரீ பத்மராஜா தினேசன் - 150 புள்ளி
(யா/இந்து ஆரம்பப் பாடசாலை)
பரீட்சை: ஒவ்வொரு ஞாயிறும் 7 பிரிவுகளில்
நாவலர் கல்வி நிலையம்
நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[52923]


# "வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்"

யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பெருமை பெற்றுத்தந்துள்ள மாணவர்கள் விவரம்

1. இ. கோகுல்நாத் (149 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்திலேயே 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.)
2. ஜெ. சேந்தன் 114)
3. தி. கல்பனா (113)
4. மா. வானதி (108)
5. அ. சங்கீதா (104)
6. ந. தவலோஜினி (93)

இவர்களை நெறிப்படுத்திய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனைவரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

தமிழ்ச் சங்க நிர்வாகம்
யாழ்/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி
புத்தூர். (52922)

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலைமாமணி
## சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்

(முன்னாள் அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம்)

தோற்றம்: 03-05-1908
மறைவு: 26-01-1986

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணி மனை,
மல்லாகம்.

(52922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனர் கிளர்ச்சி செய்தால் பதிலடி என்கிறது இஸ்ரேல்

டெல்அவிவ் ஜன. 27

பலஸ்தீனர்கள் மீண்டும் கிளர்ச்சியை ஆரம்பித்தால் தமது நாடு பதிலடி கொடுக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நதநியாகு எச்சரித்துள்ளார்.

வன்செயல்கள், மிரட்டல்கள் மத்தியில் அரசியல் பேச்சுக்களில் இஸ்ரேல் ஈடுபடாது என்று அவர் தமது அமைச்சரவையில் உறுதி கூறினார்.

அமைதிப் பேச்சுக்கள் தொடராமல் தடைப்பட்டால் பலஸ்தீன கிளர்ச்சி ஒன்று உருவாகலாம் என்று அரவாத் எச்சரிக்கை விட்டதைத் தொடர்ந்தே இஸ்ரேலியப்பிரதமர் தனதுகருத்தை வெளியிட்டுள்ளார்.

[இ-3]

## ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிடுகிறது

ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நோன்பு காலமான ரம்லான் நிறைவுறும் வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் தாக்குதல் நடைபெறலாம் என்று கருதப்படுகிறது.

மேலும் ஒரு ராஜதந்திர மட்ட முயற்சியை மேற்கொண்டுவிட்டு இறுதி எச்சரிக்கையை கொடுத்து அதன் பின்பே நடவடிக்கையில் இறங்க அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை எண்ணுவதாகக் கூறப்படுகிறது.

ஈராக் எந்தக் காரணத்தையொட்டியும் ஐ. நா. சோதனை அணிகளுக்கு இடமளிக்காது என்றும்—

தாக்குதல் நடத்தியே அதன் இராணுவ தகைமையை நலிவடையச் செய்ய வேண்டும் என்றும்— அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் கருதுகின்றனர்.

(இ-3)

## அல்ஜீரியாவில் மேலும் 70 பேர் படுகொலை

அல்ஜீரியாவில் கடந்த ஒரிருநாள்களில் மேலும் 70 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாதிகளே இந்தக் கொலைகளைச் செய்ததாக அரசு கூறுகிறது.

ஆனால் அரசே இந்தக் கொலைகளின்பின்னணியில் இருப்பதாக முஸ்லிம் தீவிரவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆனால் அரசு அதை மறுத்துள்ளது. (இ-3)

## வட அயர்லாந்தில் வன்முறைகள்

பெல்பாஸ்ட், ஜன. 27

வடஅயர்லாந்தில் டெனிஸ் பென் நகர மதுபான நிலையத்துக்கு வெளியே இருவர் சுடப்பட்டுள்ளார்.

குண்டு ஒன்றும் அப்பகுதியில் வெடித்துள்ளது.

ஒரு வாடகைக்கார் சாரதி தலையில் சுடப்பட்டார்.

ஒரு மாத காலத்தில் அங்கு இடம்பெற்ற 10 ஆவது கொலை இதுவாகும்.

(இ-3)

## 300 மண்டை ஓடுகள் பஸ் வண்டியில் மீட்பு!

### நேபாள பொலிஸார் விசாரணை

காத்மண்டு, ஜன. 27

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் பஸ்வண்டி ஒன்றில் இருந்த சுமார் 300 மனித மண்டை ஓடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பஸ் வண்டியின் நடத்துனரும் அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பானைகள் போன்று செதுக்கப்பட்டிருந்த இந்த மண்டை ஓடுகள் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டவை என நம்பப்படுகிறது.

(ஐ)

## தேர்தல் விளம்பரங்களை அழிக்கும் பணி சென்னையில்

சென்னை, ஜன. 27

சென்னை நகரில் கடைக் கட்டடங்கள், சுவர்கள் ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ள

உலக அரங்கில்

தேர்தல் விளம்பரங்களை அழிக்கும் பணி மாநகரசபை சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ள தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி பொதுக் கட்டடங்கள், சுவர்கள் ஆகியவற்றில் தேர்தல் வாசகங்கள், மற்றும் சின்னங்கள், உருவப்படங்கள் ஆகியவற்றை அனுமதியின்றி எழுதக் கூடாது. இது குற்றமான செயல் என சென்னை மாநகர ஆணையர் கூறியுள்ளார்.

(இ-3)

# யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் முகவர்களுக்கான வழிகாட்டல்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 27

உள்ளூராட்சித் தேர்தல் வாக்கெடுப்பின் போது வாக்கெடுப்பு முகவர்கள் தேருநர்களின் அடையாளத்துக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கலாம். ஆனால் வாக்களிக்க வரும் ஆளை அறியாததன் காரணத்துக்காக ஆட்சேபனை எழுப்பக் கூடாது.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா முகவர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேருநராகப் பதிவு செய்யப்பட்டவர்களின் ஆளடையாளத்தை அறிந்திருந்து வாக்களிக்க வருபவர் வேறு ஆளாகவிருக்கும் பட்சத்திலேயே ஆட்சேபிக்கலாம். ஆட்சேபனையை எழுத்தில் கொடுக்கலாம். சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் அவசியமான விசாரணைகள் செய்த வாக்குச் சீட்டொன்றை வழங்குவதுபற்றி முடிவு செய்வார் வாக்குச் சீட்டொன்றை வழங்கியபின்னர் அல்லது வழங்காமல் அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டுமா என்பது பற்றிய முடிவை அவரே எடுப்பார்.

வாக்கெடுப்பு நடைபெறும் அன்று முன்னரே வர முடியாவிட்டாலும் மு. ப. 8. 45 மணிக்காவது நிலையத்திற்கு செல்ல வேண்டும்.

நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு காட்ட வேண்டும்.

வாக்கெடுப்பு பெட்டியை மூடி பொறியிடு முன் அதனைக் காட்டுமாறு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கேட்க வேண்டும். உங்களுக்குச் சொந்தமான ஏதும் பொறியை அதில் நீங்கள் இடலாம்.

வாக்கெடுப்பு ஆரம்பிக்கும் முன் வாக்கெடுப்பு நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள சாதாரண வாக்குச் சீட்டுக்களையும், கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டுக்களையும் காட்டுமாறு தலைமை அலுவலரிடம் வேண்டுங்கள்.

வாக்கெடுப்பு முடியும்வரை வாக்கெடுப்பு நிலையத்தை விட்டுச் செல்ல வேண்டாம். வெளியே செல்ல வேண்டுமானால் தலைமை அலுவலரின் அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் போது தலைமை அலுவலரிடம் அடையாளமிட்ட தேருநர் நிரலைக் கொடுத்துச் செல்லுங்கள். இல்லாது விட்டால் உங்கள் கட்சியோ அல்லது குழுவோ அதன் பின்னர் முகவர் ஒருவரை அனுப்பும் உரிமையை இழக்கும்.

வாக்கெடுப்பு முடிந்து வாக்குப் பெட்டி பொறியிடப்பட்ட பின்னர் நீங்கள் உங்களது பொறியை அதில் இடலாம் உங்களது கட்சி அல்லது குழு அவ்வாறு அறிவுறுத்தியிருந்தால் வாக்குகள் எண்ணும் நிலையத்துக்கு பெட்டி எடுத்துச் செல்லும் போது அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கு ஏதும் லேபிளை நீங்கள் ஒட்டலாம். ஆனால் அந்த லேபிளின் பிரதியொன்று கட்டாயமாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது.

(இ-5)

## அச்சுவேலி மருத்துவமனை வார்ட்டுகளில் இடநெருக்கடி

நெல்லியடி, ஜன 27

அச்சுவேலி அரசினர் மருத்துவ மனையில் வார்ட்டுகள் பற்றாக்குறையினால் வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளிகள் நிலத்தில் படுக்கும் நிலை உருவாகியுள்ளது.

வலிகிழக்குப் பகுதியில் தரமான வைத்தியசாலையாக விளங்கும் இந்த வைத்தியசாலைக்கு அச்செழு, ஊரெழு, ஈவினை, புன்னாலைக் கட்டுவன், சிறுப்பிட்டி, நீர்வேலி, ஆவரங்கால், புத்தூர், வளவாய், தம்பவலை, பத்தைமேனி, இடைக்காடு போன்ற பல இடங்களிலும் இருந்து தினமும் 350-க்குமேற்பட்ட வெளிநோயாளிகள் சிகிச்சை பெற வருகின்றார்கள்.

[இ-109]

## வாக்காளர் அட்டைகள் யாழ். தபால் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜன 27

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று முதல் யாழ். தபால் நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன.

வீடு வீடாக வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும்—

காலை 9 மணி முதல் 4 மணி வரை யாழ். தபாலகத்தில் வைத்து அவை விநியோகிக்கப்படும் என்றும் — யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தேர்தல் தினத்தன்று மாலை 4 மணி வரை வாக்காளர் அட்டைகளைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

[இ-3]

## அரசியல் தீர்வு காண பேச்சுவார்த்தை தேவை

### சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பேச்சு

நெல்லியடி, ஜன. 27

பேச்சு வார்த்தை மூலம் தான் அரசியல் தீர்வு காண முடியும். அப்படியின்றி யுத்தம் தொடருமாயின் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையிலும் பார்க்க தமிழ் மக்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைய நேரிடலாம்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தென்புலோலி, புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரி எஸ். ஆர். விஜயரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நகரசபை, பிரதேசசபை, வாக்கெடுப்பை விசேடமாகக் கணிப்பதில்லை. நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு நாம் முன்னுரிமை கொடுத்து வருகின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த 18 வருடங்களின் பின்னர் சுதந்திரமாக வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசினால் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தினால் நிறைவேற்ற முடியாவிட்டால் பொதுமக்களினால் நிறைவேற்ற இயலும்.

தீர்வுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பும் யுத்தம் தொடருமா என தென் இலங்கை மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பது உங்கள் கைகளிலேதான் தங்கியுள்ளது.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் பல இலட்சம் மக்கள் வாழ்ந்தயாழ் குடாநாட்டில் தற்பொழுது 6 இலட்சம் மக்களே உள்ளனர். 8 இலட்சம் மக்கள் கொழும்பிலும் வேறு பகுதிகளிலும் இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலின் இப்போதைய மக்கள் தமது வாக்குக்களை செலுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் சமாதானத்தை எதிர்பார்க்கிறார்களென்பது தென் இலங்கை மக்களுக்கு நன்கு விளங்கும் என்றார்.

(109)

## மரக்கறி விலை வீழ்ச்சி

வலிகாமம் கெற்கு, ஜன, 27

மரக்கறி விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

மரக்கறிகள், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றின் அறுவடை ஆரம்பித்துள்ளதால் சந்தையில் அவற்றின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

வெங்காய அறுவடை காரணமாக கிலோ 60 ரூபாவுக்கு விற்பனையாகிய வெங்காயம் தற்போது 18 ரூபா முதல் 20 ரூபா வரை விற்பனையாகின்றது.

மருதனார்மடம் சந்தையில் உருளைக்கிழங்கு கிலோ 40 ரூபாவாகவும், பயற்றங்காய் கிலோ 20 முதல் 30 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

வாழைப்பழம் இதரை 20 ரூபாவாகவும், கதலி 15 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

மற்றும் மரவள்ளி, இராசவள்ளி, கரட், கரணை, பீற்றூட், வெண்டி, கத்தரி, தக்காளி, அவரை, கீரை வகைகள் போன்றவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளன.

(இ-152)

## அச்சுவேலியில் கரிப்பு உற்பத்தி

நெல்லியடி, ஜன 27

அச்சுவேலி மாவடி வீதிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி ... நாளாந்தம் அதிகரித்து வருகின்றன

(இ-109)

## அல்வாயில் தேடுதல்

நெல்லியடி, ஜன. 27

அல்வாய் குமிழடிப் பிள்ளையார் ஆலயத்துக்கும், ஒடை வைரவர் ஆலயத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றதாகத் தெரிவருகின்றது.

வீதியில் சைக்கிளில் வந்த இருவர் படையினரைக் கண்டதும் சைக்கிளை வீதியில் எறிந்து விட்டு மறைந்தமையே இத் தேடுதலுக்குக் காரணமெனத் தெரிய வந்தது.

(இ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் கா. தவராசா சேவை நலன் பாராட்டு மலர்

## ஆசிரியர் நலன்பேணியவர்

ஒய்வு பெறும் அதிபர் கா. தவராசா அவர்களின் சேவை பாராட்டுக்குரியது. இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றிய இவர் தனது சொந்த மண்ணான வேலணையிலும், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், கல்வியங்காடு இந்து தமிழ் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றிலும் அதிபராகப் பணி புரிந்து ஆரம்ப மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தூண்டுதலாக விளங்கியவர். இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தில் அங்கம் வகித்து ஆசிரியர்களின் நலனைப் பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டியவர். வன்னை வடக்கு கொத்தணிப் பாடசாலைகளின் அதிபராக இருந்த இவர் கொத்தணி செயற்பாடுகளுக்கு பெரிதும் ஒத்தாசையாக விளங்கியவர். கடமை உணர்வுமிக்க அவர் ஒய்வு பெற்றாலும் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டுமென எதிர் பார்க்கிறோம்.

திருமதி ஜெயராஜா
(அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி)

## எம் சமூகத்துக்கு அதிபர்

உயர்திரு. கா. தவராசா அவர்கள் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அதிபராக வந்த நாள் முதல் இன்று வரை ஏறத்தாழ ஐந்து ஆண்டு காலமாக அவருக்கும் எமக்கும் ஆலயப் பணியின் காரணமாகவும், இப் பாடசாலையின் சூழலைச் சேர்ந்தமை காரணமாகவும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. இன்று இவர் தனது அறுபதாவது வயதை அடைந்த காரணத்தினால் ஒய்வு கொடுக்க வேண்டுமென்ற சட்ட வரைபின்படி ஒய்வு பெற்றுச் செல்கின்றார். உண்மை யாதெனில் ஆண்டுகள் தான் அறுபது சென்று விட்டன. அவரது பணிகள், திறமைகள், செயற்பாடுகள் இன்னும் இளமையாகவும், மிடுக்காகவுமே உள்ளன. அவரது சமயப்பணி, அறநெறிப்பணி, சமூகப்பணிகளுடன் மாணவர்களை ஊக்குவிப்பதற்கான பணிகள் தொடர வேண்டும். எமது ஆலய வளர்ச்சிக்கு உரிய அறிவுரைகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் இவர் பல்லாண்டு காலம் மனைவி, மக்களுடன் நீடூழி வாழ வேண்டுமென கொண்டலடி விநாயகனின் தாள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

தர்மகர்த்தா சபை
(யாழ். வண். வட. கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம்)

## இனிய பண்பாளர்

கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் தன்னலம் கருதாச் சேவையாற்றுபவர் திரு கா. தவராசா. அயராத உழைப்புடன், அறிவார்ந்த பண்புடனும் கருணை கலந்த பணியை அவர் தமது ஆசிரிய சேவையின் போதும் தொடர்ந்து அதிபர் சேவையின் போதும் வழங்கியுள்ளார். திறந்த மனத்துடன் பழகும் இனிய பண்பாளர் அவர்.

கல்வித் திணைக்களத்திற்கும், பாடசாலைக்கும், சமூகத்திற்குமான மும்முனை உறவினை சமநிலை தளம்பாது பேணிக் காத்தமை அவரது அதிபருக்கான சேவைக் காலத்தின் திறமைக்குச் சான்றாகும்.

ஆசிரிய சங்கத்தின் வரலாற்றிலும் தனது சேவை மூலம் தனது பெயரை நிலை நிறுத்திக் கொண்டவர். சக ஆசிரியர்களுக்கு எவ்வித இடர்பாடுகள் நேர்ந்தாலும் தயங்காது உதவி செய்யும் பரந்த மனப்பான்மையை பல சந்தர்ப்பங்களில் நாம் கண்டிருக்கின்றோம். அவர் வாழ்க!

திருமதி ச. காங்கேயன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்விக்கோட்டம்)

## எண்ணிய முடிக்கும் தீரன்

கண்ணியக் கருத்து மிக்கான்
கடமையிற் செழுமை கொண்டோன்
எண்ணிய முடிக்கும் தீரன் – எவருமே
போற்ற வாழ்ந்தோன்.

கண்ணுதற் கடவுள் போல
கருபபொருள் பற்றி நிற்போன்
விண்படு புகழோடென்றும்
விளங்குக நலமே என்பேன்.

உருத் தொழில் சிறக்க வேண்டி
கருமமே இயற்றியாண்டும்
கருபபக தருவாய் வாழ்ந்த
கா. தவராசா வென்னும்
விருப்புடை விழுமியோனே
விடைபெறு நாளிலின்று
தருமொரு வாழ்த்தை ஏற்பீர்
தகவுடைப் பெரியோய் அன்பாய்!

திருமதி த. துரைசிங்கம்
(அதிபர், யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை)

(இ-2721)



அதிபர் கா. தவராசா

## தனித்திறமையாளன்

திரு. காசிப்பிள்ளை தவராசா அவர்களை நான் இளமைக்காலம் முதல் அறிந்தவன். எனது ஊராகிய வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டது மாத்திரமல்ல எனக்கு உரித்துடையவருமாவார். அவர் ஆசிரியராக கடமையாற்றிய காலம் தொடக்கம் பல்வேறு இடங்களில் தனது தொழிலை சிறப்புறச் செய்து ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், சமூகத்தினதும் நற்பெயரைப் பெற்றவர். தனது குடும்பத்திலும் புகுந்த இடத்திலும் பொறுப்பாக இயங்கியதில் அவருக்கு அவரே நிகர். பயிற்சிக் கல்லூரிப் படிப்பு முடிந்த பின்பும் தனது தொழிலில் ஆர்வம் குன்றாமல் சிறப்பாக இயங்கியவர். பின்பு அதிபராகி நல்ல பாடசாலைகளில் அவரது தனித் திறமையினாலும், பண்பினாலும் நல் அதிபராக பதவி உயர்வுபெற்றவர். அவர்பணியில் இருந்து ஓய்வுபெறுவது கல்வி உலகுக்கு இழப்பு என்றாலும் தனது நற்சேவையை அவர் தொடர்ந்து கல்வி உலகுக்கு வழங்குவாராக!

சு. இரத்தினராசா,
(கல்விப் பணிப்பாளர், கல்வி வலயம் 1)

## சமூக, சமயப் பணியாளன்

திரு. கா. தவராசா அவர்கள் ஏறக்குறைய 37 வருடங்கள் சேவையாற்றி ஆசிரியப்பணி புரிந்து இளைப்பாறுவதையிட்டு ஒருபக்கம் மகிழ்ச்சியும் மறுபக்கம் சிறு கவலையும ஏற்படுகிறது. 37 வருடம் தொடர்ந்து சிறந்த ஆசிரியப் பணி புரிந்தவர்களை காண்பது மிகவும் அரிது. அதையிட்டு மகிழ்ச்சி. அத்தகைய ஒருவர் சேவையிலிருந்து இளைப்பாறுவதையிட்டு கவலை, ஒய்வு பெறினும் அவரது கல்விப்பணி சூழலுக்கேற்ப தொடர வேண்டுமென்பது எனது விருப்பம்.

திரு. கா. தவராசா அவர்கள் எனது உறவினர். அவரை ஆசிரியப் பணியில் இணைப்பதில் எனது தந்தையாரும் முன்னின்று முயற்சித்தவர். 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்க முன்னர் தவராசா அவர்கள் இந்து போட் நிறுவனத்தில் ஓர் ஆசிரியராக இணைந்திருந்தார்.

திரு. கா. தவராசா அவர்கள் கல்விப் பணியுடன் நின்று விடாது சமய, சமூகப் பணிகளிலும் பங்கு கொண்டதுடன், நண்பர்கள், உறவினர்களின் நன்மை, தீமைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து வருபவர். அவரின் சமய, சமூகப் பணி தொடர்வதாக!

பொ. பாலசுந்தரம்பிள்ளை,
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

## சிறந்த இறை பக்தியாளன்

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக ஐந்து வருடங்கள் சேவையாற்றிய இப்பெருந்தகையை பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அடக்கத்தையும், அறிவையும் தனக்கு அணிகலனாகக் கொண்ட திரு கா. தவராசா அவர்களுடைய சேவை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன நிறைவைத் தந்தது.

மாணவர்களுடைய இளமைக்கல்வி ஒரு கட்டடத்தின் அத்திவாரம் போன்றது. அந்தக்கல்வியை நல்ல முறையில் கற்பதற்கு அமைக்கப்பட்டதே யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை — அங்கு அதிபராகக் கடமையாற்றி இறை பக்தியோடு சேர்ந்த கடமைகளை நிறைவேற்றிய அதிபர் அவர்களுக்கு பராட்டு வழங்கும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் இறைவன் ஆசிகள் கிடைப்பதாக!

குருமகாசந்நிதானம்,
நல்லைஞானசம்பந்த ஆதீனம்,

## புதிய அதிபரின் வாழ்த்து

சீர் பாடச் சிந்தனையில் அறிவூட்டும் அரிய பணிச்
செம்மலெனச் செகமெல்லாம் அருள் பூக்க
நீர் பாய நிழலாகி, யாழ். இந்து ஆரம்பப்
பேராளன் பள்ளி வளர்த் தாளாக்கித்
தார் பொலியச் சாதனையால் சந்தமொழு பெருமைத்
தேர்வு நிகர்த் தவராசா அறுபது காண் ஒய்வு
பார் புகழக் கண்டேன் அவர் பணியில் சீர்பெறு
பணி தொடர்ந்த வாழ்த்துகின்றேன்.

வே. ஞானகாந்தன்
(அதிபர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் திரு. காசிப்பிள்ளை தவராசா இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை ஒட்டி பாடசாலை சமூகம் வெளியிடும் சேவை நலன் பாராட்டு இதழ் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் திறன்மிக்க அதிபர்

எம் ஆசானின் சீரிய பணி ஆசிரிய, அதிபருக்கான இலட்சணங்கள் பொருந்தியவை. அவர் எக் கருமத்தையும் ஆராய்ந்து தமக்குச் சரி எனத் தோன்றுவதைச் செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவர். இலங்கையின் பல இடங்களிலும் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் சிறந்த சேவைக்கான பாராட்டுகளைப் பெற்றவர்.

பாடசாலைக்கு தேவைகள் இனங்கண்டு செயலாற்றியவர். இவ்வாறான செயல்திறன்மிக்க அதிபர் தமது சேவையிலிருந்து இளைப்பாறுவது எமது பாடசாலைக் கல்விச்சமூகத்துக்குப் பேரிழப்பாகும். அவரது வழியில் எமது பாடசாலை நிர்வாகம் சிறப்புடன் இயங்க வேண்டுமென எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகரின் அருளாசியை வேண்டுகின்றேன்.

திரு. சு. தியாகலிங்கம்,
உபஅதிபர்
(தலைவர், பாடசாலை ஆசிரியர் நலன்புரிச்சங்கம்)

## சமூகத்தை ஒன்றிணைத்த அதிபர்

எம் அதிபர் தம் பணியை செவ்வனே முடித்து இன்று ஒய்வு பெறுகிறார். யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் சேவை செய்த ஐந்து வருட காலத்தில் பழைய மாணவர் சங்கத்தையும், அபிவிருத்திச் சபையையும் ஒன்றிணைத்து பல சேவைகளைச் செய்து பள்ளிக்கூடத்தின் தலை சிறந்த அதிபராக எல்லோராலும் பாராட்டப்பட்டார். இவர் காலத்திலேயே பதினைந்து லட்ச ரூபாய் பெறுமானமுள்ள விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்யப்பட்டது. இடர்மிகுந்த காலத்தில் மாணவர்களை மிகச் சிறந்த முறையில் கல்வி கற்க ஆசிரியர்களைத் தூண்டி மாணவர் கல்வியில் ஊக்கம் கொடுத்து யாழ். மாவட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக கூடிய புள்ளிகளை பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்கச் செய்த சாதனை அவரையே சாரும். எங்களுடனும், ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் அன்பாய்ப் பழகி பள்ளிக்கூட அபிவிருத்திக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கினார் அவர். அவரின் ஒய்வு காலம் மன அமைதியும், மகிழ்வும் மிக்கதாக சிறக்க வேண்டும் என கொண்டலடி விநாயகரை வேண்டுகிறேன்.

தி. இராஜேந்திரன்
(பொருளாளர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பழைய மாணவர் சங்கம்)

## சிறந்த வழிகாட்டி

திரு. காசிப்பிள்ளை தவராசா அவர்கள் நீண்டகால ஆசிரியப் பணியை செவ்வனே முடித்து இன்று ஒய்வு பெறுகின்றார். அவரின் 37 வருட சேவைக் காலத்தில் இறுதி ஐந்து வருடங்களையே யாழ்ப்பாணம் இந்து ஆரம்பபாடசாலை பெற்றுக் கொண்டது. இக்காலத்தில் இப்பாடசாலை குறிப்பிடத்தக்க அபிவிருத்தி கண்டது.

ஏறத்தாழ பதினைந்து இலட்ச ரூபா பெறுமானமுடைய காணியை, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் போன்றோர்களை ஒன்று சேர்த்து அவர்கள் உதவிபெற்று, இப் பாடசாலைக்கு என கொள்வனவு செய்து ஒரு மைதானத்தை உருவாக்கிய பெருமை இவருடைய செயற்றிறனுக்கு சான்று பகரும். இடர் மிகுந்த காலத்தில் பாடசாலையை ஒரு சிறந்த மீகாமன் போல வழி நடத்திய பாங்கு பாராட்டுதற்குரியது. பாடசாலை அபிவிருத்திச் சங்க முயற்சிகளில் எங்களுடன் ஒத்துழைத்து பாடசாலை இன்றைய சிறப்பு நிலையை அடைவதற்கு அவர் ஆற்றிய சேவை என்று மனம் கொள்ளத்தக்கது.

அவரது சேவையை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் மனப் பூர்வமாகப் பாராட்டுவதுடன் அவரது ஒய்வுக் காலம் அவருக்கு மன அமைதியையும் மகிழ்ச்சியையும் வழங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பா. இராஜேஸ்வரன்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

## யாழ். இந்து அதிபர் வாழ்த்து

அதிபர் திரு. கா. தவராசா இன்று தமது அறுபதாவது அகவையில் ஆசிரியப் பணியிலிருந்து ஒய்வு பெறுகின்றார் என்பதை நம்பவே முடியவில்லை. காரணம் அவரது தோற்றமேயாகும். இளமைத் துடிப்பும், விரைந்து கருமங்களை நிறைவேற்றும் பண்பும், இனிய வார்த்தைகளும், சொல்லும் செயலும் ஒருமித்தாய் விளங்குவதும், நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் போன்ற பல குணாதிசயங்கள் இவரிடையே ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன.

1960-09-05 ஆம் திகதி தனது ஆசிரியப் பணியை வேரவில் இந்து த. க. பாவில் ஆரம்பித்த இவர் பல பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# செயலாளர் பதவியிலிருந்து பாலபட்டபெண்டி ஓய்வுபெறுவார்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து பாலபட்ட பெண்டி இம்மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்றுச் செல்வதால் அவரின் இடத்துக்கு பாலபட்ட பெண்டி நியமிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பௌத்தர் சபைத் தலைவர் பதவியிலிருந்தும் பாலபட்ட பெண்டி இராஜினாமா செய்யவுள்ளார். இதேவேளை அடுத்த மாத முற்பகுதியில் கூட்டுத்தாபனம் ஒன்றின் தலைவராக பாலபட்ட பெண்டியை நியமிப்பதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

(இ-5)

# புலிகள் சந்தேக நபர்கள் இருவர் தப்பிச் சென்றனர்

## மதவாச்சிப் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஜன. 27

மதவாச்சிப் பகுதியில் உள்ள இராணுவத்தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த இரு விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தப்பி விட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் தப்பிய இவர்களைத் தேடிக் கண்டு பிடிக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும் —

அந்த முயற்சி கைகூடாததால் அந்த முகாம் இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது

(இ-164-3)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 12 — 1922

உதிர்வு: 20 — 01 — 1993

## நாகலிங்கம் சுப்பிரமணியம்

(உரிமையாளர், மணியம் கடை, சூராவத்தை – சுன்னாகம்)

திதி: 27 — 01 — 1998

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்கள் மனதைவிட்டு நீங்கா!

அன்புடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(52862)

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 09 — 03 — 1917

அரன் அடியில்: 01 — 02 — 1984

## திருமதி அசுபதி சின்னத்தம்பி

(பனை, தெல்லிப்பழை.)

திதி: 27 — 01 — 1998

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சிவநெறி வழுவா அன்னையே! ஆண்டுகள் பதினாலு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா ஒளித்தீபமாக ஒளிவீசும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் குலதெய்வமாகிய அன்னை பராசக்தியை பிரார்த்திக்கும்:

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சக்திவாசா.
பனை, தெல்லிப்பழை.
தற்காலிக விலாசம்:- ஆக்லேன்,
உடுவில், சுன்னாகம்.

(ஒ/2718)

# இனியாவது கட்சி அரசியலை மறந்து சிங்கள பௌத்தர் ஒன்றுபட வேண்டும்

## தலதா மாளிகை தாக்குதல் குறித்து மகாநாயக்கர் அறிக்கை

கண்டி, ஜன. 27

''பொய்யான தாயகக் கோட்பாட்டுக்கு ஏமாந்து நாட்டின் ஒரு பகுதியை தமிழ் இனத்துக்கு வழங்க முயலும் தீர்வுப் பொதி — மற்றும் அதைக் காரணமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்புச்சட்டம் — ஆகியவற்றால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு இனியாவது சிங்கள பௌத்தர்கள் ஒன்றுபட வேண்டும்.''

இப்படி அஸ்கிரிய மகா நாயக்க தேரர் பலிப்பான சிறி சந்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி தலதா மாளிகை முன்பாக இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு சிங்களவர்களால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதற்கு முன் உதாரணங்கள் எவற்றையும் முன்வைக்காமல் இருபான்மையினரின் வாக்குகளைப் பெறும் நோக்கில் சிங்கள பௌத்தர்கள் செயற்படுகின்றனர்.

சிறிலாங்காவின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பையும் மூன்றில் இருபகுதி கரையோரப் பகுதியையும் உள்ளடக்கிய தாயகம் என்ற பொய்யான கோட்பாட்டை ஏற்று அதன் பிரதேசங்களையும் தன்னாட்சி உரிமையையும் தமிழருக்கு வழங்குவதற்கென அரசால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அரசமைப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனால் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய அனர்த்தங்களை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தாவது கட்சி அரசியலைத் தற்காலிகமாவேனும் மறந்து சிங்களவர்களும் பௌத்தர்களும் ஒன்றுபட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

(இ-10)

## ஆய்வுகூட பரிசோதகராக ஒருவர் மட்டுமே

நெல்லியடி, ஜன. 27

மந்திகை மருத்துவமனையில் ஆய்வுகூட பரிசோதகர் ஒருவரே கடமையில் உள்ளதனால், பரிசோதனைக்கு வரும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் பலமணி நேரம் வைத்தியசாலையில் தங்கியிருக்கின்றார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் இந்த ஆய்வு கூடத்தில் ஆய்வு கூட பரிசோதகர்களாக ஐவர் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

(இ-109)

## கோரிக்கை

சுழிபுரம், ஜன. 27

வழக்கம்பரையில் அரச கட்டடப்பகுதியினரால் கட்டப்பட்டு இடையில் தடைப்பட்டிருந்த கட்டடத்தை கட்டி முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் தனித்தனியாகவும் மகஜர் மூலமாகவும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(இ-28)

## திக்கம் வடிசாலைக்கு கொதிகலன்

நெல்லியடி, ஜன. 27

திக்கம் வடிசாலைக்கு புதிய கொதிகலன் (பொயிலர்) ஒன்று இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கின்றது.

சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான, இப் புதிய கொதிகலனை பெறுவதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு. பாக்கியநாதன் மேற்கொண்டு வருகின்றாரென தெரிவிக்கப்படுகின்றது.

(இ-109)

## தரமற்ற தையல் இயந்திரம்

நெல்லியடி, ஜன. 27

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தரமற்ற தையல் இயந்திரங்களைப் பெற்ற சுமார் 19 பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'எஸ் ரி. சி' வர்க்க இன்னம் பொறிக்கப்பட்ட தையல் இயந்திரங்களே தரமற்றவை என்று கூறப்படுகிறது.

(இ-109)

## வீதி திருத்தம்

செம்பியன்பற்று, ஜன. 27

நீண்டகால இடைவெளியின் பின் பளையில் இருந்து இயக்கச்சி வரையுள்ள வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

எனினும் 10 வருடங்களுக்கு மேலாக புதுக்காடு-மருதங்கேணி பிரதான வீதி இதுவரை செப்பனிடப்படாமல் இருக்கிறது.

(இ-36)

## மோசமான வீதி

வரணி, ஜன. 27

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் கலிகைச்சந்தி தொடக்கம் கொடிகாமம் வரையிலான வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளது.

பஸ்கள் தட்டிவான்களை இந்த வீதியால் செலுத்தும் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(இ-171)

## தலதா மாளிகை தாக்குதல் குறித்து

# 2 வாரங்களுக்கு முன்னரே எச்சரிக்கப்பட்டிருந்ததாம்

கொழும்பு, ஜன. 27

கண்டி நகரில் நடைபெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டங்களைக் குழப்பி, கலவரங்களை உருவாக்க விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர் என இரண்டு வாரங்களுக்கு முன்னரே ரகசியப் புலனாய்வுப் பிரிவினரால் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாம்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு வாகனங்களில் வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்ற தகவலும் அந்த அறிக்கையில் உள்ளடக்கியிருந்ததாம்.

கண்டி நகரில் நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டங்களை இலக்காக வைத்தே இந்த வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று கூறப்படுகிறது.

(இ-10)

# மருந்தகம் நண்பகலுடன் மூடப்படுவதால் மக்கள் பாதிப்பு

செம்பியன்பற்று, ஜன. 27

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அம்பன் மத்திய மருந்தகம் நண்பகலுடன் மூடப்படுவதால் செம்பியன்பற்று மாமுனை பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவர்களின் நலன் கருதி மருதங்கேணி உதவி அரச அதிபரின் முயற்சியால் செம்பியன்பற்று சனசமூக நிலையத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை மலேரியா தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருவதாக பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் கோ. பரராசசிங்கம் தெரிவித்தார்.

(இ-36)

# தமிழ் விரிவுரையாளரும் 2 மாணவிகளும் கைது

## காலியில் ஹோட்டலில் தங்கியிருந்தனர்

காலி, ஜன. 27

காலிப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கடந்த 23 ஆம் திகதி இரவு 11-30 மணியளவில் காலியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சோதனைகளை மேற்கொண்ட பொலீஸார் சந்தேகத்திற்கு இடமான தமிழ் இளைஞர் ஒருவரையும் இரு தமிழ் யுவதிகளையும் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையின் போது அந்த இளைஞர் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறவர் எனவும் —

அந்த இரு யுவதிகளும் பல்கலைக்கழகம் ஒன்றில் பயிலும் முதலாம் ஆண்டு மாணவிகள் எனவும் —

அவர்கள் மூவரும் இருதய மருத்துவ நிபுணர் ஒருவரைச் சந்திக்க காலிக்கு வந்தனர் எனவும் — தெரிய வந்துள்ளது.

ஹோட்டலில் ஒரே அறையில் தங்கியிருந்த இந்த மூவர் குறித்தும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக துணைவேந்தரிடம் பொலீஸார் விசாரித்தனர் என்றும் —

குறித்த விரிவுரையாளர் தமது பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார் எனவும் ஆனால் இருதய நோய்க்கு சிகிச்சை பெற அவர் காலிக்குச் சென்றது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் — தெரிவிக்கப்பட்டதாம்.

கைதான மூவரும் பொலீஸாரால் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

[இ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உடுவில் மல்வம் ஞான வைரவர் கோயிலுக்கு தெற்குப் பக்கமாக உள்ள ஒன்பது பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இ. நாகேஸ்வரசர்மா, முத்துத்தம்பி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

[49920]

### தவறிவிட்டது

சங்கிலித் தாலிக்கொடி (9 பவுண்) ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் அல்லது யாழ். பஸ்நிலையத்தில் இருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் தனியார் பஸ்களில் 23-1-98 (வெள்ளி) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தையா வேதீஸ்வரநாதன், சிமெந்து கூட்டுத்தாபன விற்பனைப் பகுதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[52876]

### வினாத்தாள்

25-1-98 இல் நடைபெற்ற 12 ஆம் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ். நகர்.

[52902]

### A/L PHYSICS

உங்கள் பௌதிகவியல் வகுப்புக்களுக்கு தனித்துவமான ஆசிரியர் விஜயகுமாரன் B. Sc (Special) தொடர்புகட்கு: இல. 10. முதலாம் ஒழுங்கை. பிறவுண் வீதி. அல்லது S. வரதபாலீசுரன் கட்டப்பிராய் (வட்டக்குளம் அருகில்).

[52867]

### ஆங்கிலம் – கணிதம்

ஆண்டு 6 - 11 வரை Literature ஆண்டு 9 (O/L வினாவிடை உட்பட) G A Q ஆங்கிலம் SPOKEN ENGLISH கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

[52824]

## நூல் வெளியீட்டு நிகழ்வு

நூல்; செய்முறைப் புவியியல் - I
( Practical Geography - Part - I )
(A/L, G. A. Q, B. A. வகுப்புகளுக்குரியது)

ஆசிரியர்: S. T. B. இராஜேஸ்வரன்
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இடம்: புவியியற்றுறை மண்டபம்
யாழ், பல்கலைக்கழகம்.

காலம் 28 - 01 - 98
புதன்கிழமை பி. ப. 2. 30

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நன்றி

புவியியற்கழகத்தினர்,
புவியியற்றுறை.
யாழ். பல்கலைக்கழகம்.

[சி/2751]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10 – 02 – 1932

மறைவு: 28 – 12 – 1997

### அமரர் மார்க்கண்டு தர்மலிங்கம்

(அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்,
மானிப்பாய் இலங்கை வங்கிக் கட்டடம்,
உரிமையாளர், "தர்மரூபனி" பல்பொருள் வாணிபம்)

நிகழும் 27-01-1998 செவ்வாய்க்கிழமை எமதுஇல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தெய்வம் மார்க்கண்டுதர்மலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

(52878)

## வாழ்த்துகின்றோம்

### செல்வி பிரியங்கரி சத்தியசீலன்

(சென்ஜோன் பொஸ்கோ)

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக செல்வி பிரியங்கரி சத்தியசீலன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உறவினர், சுற்றத்தார், நண்பர்கள்.

(சி/2720)

## முதலாவது பிறந்த நாள் நல்வாழ்த்து



### செல்வன் பாலசுப்பிரமணியம் டிலக்ஷன்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த
பாலசுப்பிரமணியம் உதயநிர்மலா தம்பதிகளின்
செல்வப்புதல்வன் டிலக்ஷன்

இன்று (27 - 01 - 98) செவ்வாய் தனது முதலாவது பிறந்த தினத்தை திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். டிலக்ஷனை டோகாவில் இருக்கும் அப்பா, அம்மா, குட்டிச் சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, மற்றும் பெரியப்பா குடும்பம், ஐயய்யா குடும்பம், மல்லாவியில் இருக்கும் மாமா குடும்பம், சின்னத்தை மற்றும் மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், சகோதரிகள், மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ் வாங்கு வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர்.

தகவல்:
திருமதி உ. பாலசுப்பிரமணியம்

(சி-2714)

## நினைவஞ்சலி

11 ஆம் ஆண்டு | 1 ஆம் ஆண்டு





### அமரர் வல்லிபுரம் இராமநாதன்

தோற்றம்: 04 - 05 - 1919 மறைவு: 13 - 02 - 1987

### திருமதி இராமநாதன் இராசமணி

தோற்றம்: 07 - 07 - 1921 மறைவு: 07 - 02 - 1997

கண்கண்ட தெய்வங்கள்
நீவிரன்றோ மறப்பதெங்கே?
பண்புடனே நாம் வாழப் பயிற்றுவித்து
விண்ணகத்து விமலன் தாள் நாடிச் சென்றீர்!
அவன் பாத நிழலில் நீவிர் என்றும் வாழ்வீர்!
இறைஞ்சுகின்றோம் இறைவனையே.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீங்கா நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உடன் பிறப்புகள்.

தம்பையா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(52906)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பில்: 07 – 10 – 1928

ஆண்டவன் அழைப்பில்: 27 – 01 – 1996

### திருமதி றோசலின் துரைரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியை-B.Sc. Lond.)

நிலையான வாழ்வினிலே
நீங்காத நினைவுகளைத் தந்து
எம் மனதிலும் வீட்டிலும் தெய்வமாகி
நிலையான வாழ்வு தேடி நீங்கினீரோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், சகோதரி,
மைத்துனி, மருமகள்,
உற்றார், உறவினர்.

நாவற்குழி,
தச்சன்தோப்பு.

(52874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

**யா/தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி**
**தெல்லிப்பழை**

**1997 ஐந்தாம் ஆண்டு**
**புலமைப்பரிசில் பரீட்சையில்**
சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த உங்களைப் பாராட்டுகின்றோம்.

பாராட்டுப் பெறுவோர்:

1. தேவேந்திரா நவநீத்
2. ஸ்ரீநிவாசன் நிலாந்தன்
3. ஷாளினி திருநாவுக்கரசு

அதிபர், ஆசிரியர் குழாம்
யா/தந்தை செல்வா தொ. நி. பள்ளி
மருதனார்மடம். [52910]


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்வராசா ஞானசேகரம்**
(வத்திராயன் வடக்கு, தாளையடி)

மண்ணுக்கு: 31 — 01 — 1964
விண்ணுக்கு: 30 — 01 — 1995

திதி: 27 — 1 — 1998

அன்புமொழி பேசி – என்றும்
அல்லும் பகலும் அயராது உழைத்து – எம்மை
வழி நடத்திய அன்புச் செல்வமே!
நீங்கள் எமைப் பிரிந்து
மூன்றாண்டு, சென்றதுவே
உங்கள் நினைவு
எம் நெஞ்சில் – என்றும்
அழியாக் கோலம்தான் செல்வமே!

உங்கள் பிரிவால்
என்றும் ஏங்கிக்கொண்டிருக்கும்:
அம்மா, சகோதரர்கள்.

வத்திராயன் வடக்கு,
தாளையடி. (சி/2719)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி அமுதவல்லி இரவீந்திரன்**
[யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி கணித ஆசிரியை]

எமது கல்லூரியின் கணித ஆசிரியை திருமதி அமுதவல்லி இரவீந்திரன் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருடன் நாமும் கலந்து கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.
**மானிப்பாய் மகளிர் கல்லூரி,**
**மானிப்பாய்.**
(52909)

## ரயில் பயணிகள் கடும் சோதனை

வவுனியா, ஜன. 27

கொழும்பில் இருந்து வவுனியா வந்த ரயிலில் பயணம் செய்த பயணிகள் நேற்றுக் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ரயிலில் வவுனியா வந்த பயணிகள் ரயிலில் வைத்து ஒரு மணி நேரம் விசாரிக்கப்பட்ட பின்னரே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதேநேரம் — வவுனியா, மன்னார் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-3-164)

## வாக்காளர் அட்டை

செம்பியன்பற்று, ஜன. 27

வடமராட்சி கிழக்கு தாளையடி, வத்திராயன், மருதங்கேணி பகுதி மக்களுக்கான வாக்காளர் அட்டைகள் தாளையடியில் வைத்து விநியோகிக்கப்பட்டன. (இ-36)

## படையினர் திரும்பினர்

வடமராட்சி கிழக்குப் பகுதி மீது மேற்கொண்ட படை நடவடிக்கையை படையினர் பூர்த்தி செய்து விட்டு நேற்று முன்தினம் தமது நிலைக்கு திரும்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-36)

## தாலிக்கொடியை இழந்த பெண்

யாழ். போதனா வைத்திய சாலையில் பல் பிடுங்குவதற்காக வந்த பெண் ஒருவரின் ஒன்பது பவுண் நிறையுள்ள தாலிக்கொடி காணாமல் போய்விட்டது.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இப்பெண் வைத்திய சாலைக்கு வந்து மீண்டும் வீட்டுக்குச் சென்று பார்த்த போதே அவரது தாலிக் கொடி காணாமற் போனது தெரியவந்ததாம். (இ-9-ரி)

## சிகிச்சை பெற வசதி

சுழிபுரம், ஜன. 27

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் நோயாளர் தங்கி இருந்து வைத்திய சிகிச்சை பெற வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (இ-28)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் எழுதிய ''செய்முறைப் புவியியல் 1'' நூல் வெளியீட்டு விழா நாளை புதன் பிற்பகல் 2.30 மணியளவில் பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பல்கலைக்கழக புவியற்றுறைத் தலைவர் கலாநிதி கா.குகபாலன் தலைமையில் இடம் பெறும் இவ் விழாவில் அறிமுகவுரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ .பாலசுந்தரம்பிள்ளை நூலைவெளியிட்டு வைத்து வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கல்லூரி ஆசிரியர்கள் பலர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வர். (ஐ-7)


## விற்பனைக்கு

சகலவிதமான கொப்பிகள், பாடசாலைப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விஷேச கமிஷனுண்டு.

**CITY STATIONER**
V. M. வீதி,
பருத்தித்துறை
(52869)


## மழை இல்லாததால் நெற் பயிர்கள் பாதிப்பு

வலிகாமம் தெற்கு, ஜன. 27

இவ்வருடத்துக்கான பெரும்போக நெற் செய்கைக்கு தேவையான அளவு மழை பெய்யாமையால் பல நெல் வயல்களில் பயிர்கள் வாடிக் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நெற்பயிர்கள் கதிர்வந்துள்ள போதிலும் அவை முற்றுவதற்கேற்ற நீர் நில மட்டத்தில் இல்லாமையால் நெற்பயிர்கள் பதர்களாக மாறிவருகின்றன.

தற்போது குடாநாட்டில் கடும் வெப்ப நிலை நிலவுகின்றது. குளங்களிலும் நீர் குறைவடைந்து வருகின்றன.

வசதியுள்ள விவசாயிகள் குளங்களில் இருந்து நீரை தமது வயல்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமாக இரவுபகலாக இறைத்து வருகின்றனர். (இ-162)

## கோழிக்குஞ்சு விநியோகம் இன்று இல்லை

நல்லூர், ஜன. 27

யாழ்ப்பாணம் பிறவுன் வீதியில் உள்ள கால்நடை வைத்திய நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்பட இருந்த கோழிக்குஞ்சு விநியோகம் திட்டமிட்டபடி இன்று இடம் பெறாது என அறிவிக்கப்படுகின்றது. [இ-109]


## பெற்றுக்கொள்ளுங்கள்

★ புதிய நேரப்படியான பஞ்சாங்க தகவல்களைக் கொண்ட ஒரேயொரு கலண்டர்

**திருக்கணித பஞ்சாங்க மாதக்கலண்டர்**
**விலை 45 ரூபா மட்டும்**

★ கையடக்கமான மும்மொழிகளிலுமான அழகிய பதிப்பு.
**திருக்கணித டயறி விலை 60ரூபா மட்டும்**

★ 08 — 01 — 97 இல் நிகழ்ந்த வியாழ மாற்றப் பலாபலன்கள் விலை 20 ரூபா மட்டும்

வெளியீடு:
**திருக்கணித நிலையம்,**
**மட்டுவில், சாவகச்சேரி.**
(52915)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
### நன்றி நவிலல்

மலர்வு: 16 — 07 — 1939
உதிர்வு: 25 — 12 — 1997

**திருமதி V. கந்தசாமிஆச்சாரியர் சின்னம்மா**
(சங்கத்தானை, சாவகச்சேரி.)

25-12-1997 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி கந்தசாமி சின்னம்மா அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் 27-01-1998 இல் விசுவமடு இல்லத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: P. இராமநாதன்
NO. 101,
கற்குழி, வவுனியா. (சி/2722)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சிவபூமி: 20 — 09 — 1924
சிவபதம்: 10 — 02 — 1994

இணுவில் மேற்கு
**திருமதி லில்லிமலர் சின்னத்துரை**
**(யோகம்மா)**

அம்மா நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு என்றும் அகலாது.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

துரைமலர்ப் பொய்கை,
இணுவில் மேற்கு. (52911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி தினம் இந்த ஆண்டும் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜன. 27
அகில இலங்கை ரீதியிலான தமிழ்மொழித் தினம் இந்த ஆண்டும் வழமைபோல் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ. பீ. அல்பிறெட் தமிழ்மொழித் தினம் குறித்த சுற்றறிக்கையை சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

சகல பாடசாலை அதிபர்களும் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ்மொழி தினம் பற்றிய சுற்றறிக்கையைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ. பீ. அல்பிறெட் அறிவித்துள்ளார். (இ-7)

## வெளிநோயாளர் பிரிவில் 82,800 பேர் சிகிச்சை

நெல்லியடி, ஜன. 27
கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான காலப் பகுதியில் அச்சுவேலி அரசினர் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சுமார், 82 ஆயிரத்து 800 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை மலேரியாக் காய்ச்சல், சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களினால் சுமார் 7 ஆயிரத்து 226 பேர் சிகிச்சை பெற்றிருந்ததுடன், சுமார் 2 ஆயிரத்து 487 நோயாளர்கள் வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றனர். (இ-109)

## இறைச்சிக் கடை மூடப்பட்டது

தென்மராட்சி, ஜன 27
வெட்டுவதற்கு தகுதியற்றது என பொது சுகாதாரப் பரிசோதகரால் நிராகரிக்கப்பட்ட மாடு ஒன்று வேறு இடத்தில்வைத்து வெட்டப்பட்டு சாவகச்சேரிப்பகுதி இறைச்சிக் கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டதாம்.

இதனைக் கண்டு பிடித்த சாவகச்சேரி நகரப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் து. கிளின்டஸ் அக்கடை திறப்பதற்கு அனுமதி மறுத்துள்ளார். (இ-117)

## அதிபர்களுக்கு

வடமராட்சி, கரவெட்டி கல்விக் கோட்டங்களின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் கொடியை இன்று செவ்வாய் காலை யாழ். வலயம்-1 இல் அதிபர்கள் சென்று பெற்றுக் கொள்ளுமாறு வலயம்-2 இன் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

## பெற்றோல் கான் தீயினால் ஏற்பட்ட பரபரப்பு

தென்மராட்சி, ஜன. 27
சிறிய பெற்றோல் கான் தீப் பற்றி எரிந்ததைக் கண்ட பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி மீன் சந்தைக்கு முன்பாக இடம் பெற்றது.

உடனடியாக அந்த இடத்துக்கு வந்த படையினர் தீயை அணைத்தனர்.

மோட்டார் சைக்கிளில் கொண்டுவரப்பட்ட 4 லீற்றர் பெற்றோல் கொண்ட கான் மோட்டார் சைக்கிளை ஸ்ராட் பண்ணிய போது தீப்பிடித்ததாகவும் —

இதனை அவதானித்த மோட்டார் சைக்கிளோட்டி கானை வெளியே எடுத்து வீசியதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ-117)

## அடையாள அட்டை

யாழ் பெரியகடை (ஜே/80) கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்குரிய விசேட அடையாள அட்டைகள் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணிவரை ஆரியகுளம் சந்தி இராணுவ முகாமில் வைத்து வழங்கப் படும்.

குடும்ப அட்டையுடன் வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி பகுதிக்கான கிராம சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## தலதாமாளிகை தாக்குதல் ரெலோவும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 27
கண்டி தலதா மாளிகையின் முன்னால் நேற்று முன் தினம் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலை ரெலோவும் கண்டித்துள்ளது.

தேசிய ஐக்கியத்திற்கும், தேசிய மீள் இணக்கத்திற்கும் எதிரான சக்திகள் அனைத்தும் இந்த நாசகார வேலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

இந்த அவசியமற்ற சம்பவத்தினால் மனக்கிலேசம் அடைந்திருக்கும் சிங்கள பௌத்த மக்களின் உணர்வுகளை பூரணமாக பகிர்ந்து பங்கு கொள்கின்றோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு உடனடித்தேவை என்பதை இது போன்ற சம்பவங்கள்வலியுறுத்துகின்றன. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கண்டி தமிழ் மக்களுக்கு எதிரான பலாத்காரம் மேலும் பரவாமல் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம் —என்றுள்ளது.

## மிக மோசமான நிலையில் சங்கம் புலவு மயானம்

வலிகாமம் தெற்கு, ஜன. 27
கந்தரோடையில் உள்ள ''சங்கம் புலவு'' பொது மயானம் மோசமான நிலையில் காணப்படுகிறது.

மயான வளவு முழுவதும் பற்றைகளால் நிரம்பியுள்ளது.

நெருஞ்சி முள் காரணமாக மக்கள் நடமாட முடியாத நிலை இருந்து வருகிறது.

பிரேதம் எரிப்பதற்கு செல்லும் மக்கள் ஒற்றையடிப் பாதையாலேயே செல்ல வேண்டியுள்ளது.

மயானப் பற்றைகளினுள் பாம்புகளும் குடிகொண்டுள்ளன.

பிரேதம் எரிக்கும் கொட்டகை மேல் கூரை எதுவும் இன்றிக் காணப்படுகின்றது.

மழை காலத்தில் பிரேதம் எரிப்பதில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர் (இ-152)

## ஈட்டுக் கடன்

சுழிபுரம், ஜன. 27
தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு வழங்கி வந்த ஈட்டுக் கடனை மீண்டும் இம்மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இடம் பெயர்வுகளால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்பட வேண்டும் என்று அங்கத்தவர் வேண்டியதை அடுத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

# வன்முறைச் சம்பவங்கள் குறித்து தேர்தல்கண்காணிப்புகுழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன 27
1997 டிசம்பர் 19 ஆம் திகதியில் இருந்து 1998 ஜனவரி 23 ஆம்திகதிவரை யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் குறித்து (CMVE) எனப்படும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கை முழு விவரம் வருமாறு:-

தென் இலங்கை உள்ளூராட்சித் தேர்தல்களின் போதும் பிரசார காலத்திலும் இடம் பெறக் கூடிய தேர்தல் தொடர்பான வன்முறை நடவடிக்கைகளைக் கண்காணிக்க சுயாதீனமான பக்கச்சார்பற்ற அமைப்பாக தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம்(CMVE) மாற்றுக் கொள்கைகள் நிலையம் (CPA)சுதந்திரதொடர்பு சாதன இயக்கம் (FMM) ஆகியவை வன்முறைக்கு எதிரான கூட்டமைப்பு என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டன.

1998 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி யாழ். குடா நாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தினாலும் —

இது தொடர்பில் எழுப்பப்பட்டுள்ள எதிர்ப்புகள் மற்றும் அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகளினாலும் —

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் யாழ். உள்ளூராட்சி தேர்தல்களின் போதும் பிரசார காலத்திலும் தேர்தல் தொடர்புடைய நடவடிக்கைகளை சுயாதீனமாகக் கண்காணித்தல் அவசியமானது எனக் கருதுகின்றது

தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தனது செயற்பாடுகளில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது எனக் கருதுகிறது.

தேர்தல், பிரசாரம் என்பன அமைதியாகவும், ஒழுங்கான முறையிலும், நியாயமான முறையிலும் இடம் பெறுவதை பாதிக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வரவேற்கின்றது.

''வன்முறை'' நேரடியான அல்லது மறைமுகமான அச்சுறுத்துதல், மிரட்டுதல், (உதாரணமாக சுவரொட்டிகளை அல்லது வேட்பாளர்களின் உடைமைகளை சேதப்படுத்தல் அல்லது தலையிடுதல்) போன்றவை பலாத்காரப் பிரயோகமாகக் கருதப்படும்.

தேர்தல் வன்முறை கண்காணிப்புநிலையம் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகத்தை அமைத்துள்ளது. அதன் தொலைபேசி இலக்கம் 2020 ஆகும்.

### 25 வன்முறை சம்பவங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளூராட்சி தேர்தல்களில் இன்றுவரை (23, ஜனவரி 1998) 25 வன்முறைச் சம்பவங்கள் பிரசார நடவடிக்கைகளின் போது அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 19 சம்பவங்கள் காவல் துறைக்கும் இரண்டு இராணுவத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏனைய நான்கு சம்பவங்களும் நேரடியாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இவற்றுள் ஏழு சம்பவங்கள் யாழ்ப்பாண காவல் நிலையப் பிரிவில் இடம் பெற்றுள்ளன. 11 ஊர்காவற்றுறையிலும், மூன்று சுன்னாகத்திலும், இரண்டு கோப்பாய் வடக்கிலும் இடம் பெற்றுள்ளன.

சாவகச்சேரியிலும், நெல்லியடியிலும் தலா ஒவ்வொரு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஏழு சம்பவங்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் முறையிடப்பட்டுள்ளன. ஐந்து சம்பவங்கள் ஈ.பி.ஆர். எல். எவ். இனாலும், நான்கு புளொட் இயக்கத்தினாலும் முறையிடப்பட்டுள்ளன.

சுயேச்சை இல.1 சுயேச்சை இல. 2 என்பவற்றினால் தலா இரு சம்பவங்கள் முறையிடப்பட்டுள்ளன! ஒரு சம்பவத்தில் முறைப்பாட்டாளரின் அரசியல் தொடர்பு அறியப்படவில்லை. ஏனையவை அக்கறையுடைய பிரஜைகளினால் முறையிடப்பட்டுள்ளன.

ஒன்பது (36%) சம்பவங்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் புரியப்பட்டதாக கூறப்படுகின்றது மூன்று சம்பவங்கள் (12%) ஈ.பி.ஆர். எல். எவ். இனாலும், தலா இரு சம்பவங்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தினாலும் புளொட் இயக்கத்தினாலும் புரியப்பட்டதாகவும் ஏழு சம்பவங்கள் (28%) அடையாளம் காணப்படாத நபர்களினாலும் இரு சம்பவங்கள் சுயேச்சைக் குழு 1இனாலும்புரியப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அனை ஒவ்வொன்றாக மூன்று கொலை முயற்சிகள் குறித்து சாவகச்சேரி — சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து முறையிடப்பட்டுள்ளது. மூன்று திடீர் தாக்குதல்கள் ஒரு கொள்ளைச்சம்பவம் ஓர் ஆயுதங்களை ஏந்திச் செல்லும் குற்றச்சாட்டு, 13 அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல் சம்பவங்கள் மூன்று முறையீடுகள் அஞ்சல் ஊழியருக்கு இலஞ்சம் வழங்க முற்பட்டமை ஆகியவை ஏனைய முறைப்பாடுகள ஆகும்.

தேர்தலுடன் நேரடியாக [illegible] விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் புங்குடுதீவு முகாம் மீதான தாக்குதல் ஆகும்.

ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின் செய்திகளின்படி புங்குடுதீவு முகாம் மீதான தாக்குதல் அதிகாலை 1.00 மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் அக்கட்சியின் ஏழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்துள்ளனர். உதவிக்கு அனுப்பப்பட்ட இரு உறுப்பினர்களில் ஒருவர் கொல்லப்பட்டும், இரண்டு பேர் காயமடைந்தும் உள்ளனர்.

இத்தாக்குதலில் ஐந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல்களை குழப்பும் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ள தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பெரிய தாக்குதல் இது என்பதால் இச் சம்பவம் தேர்தலில் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தும் என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் கருதுகிறது.

16 ஜனவரி 1998 இல் இடம்பெற்ற இன்னுமொரு பிரதான சம்பவத்தில் சாவகச்சேரி புளொட் அமைப்பாளர் நாகரத்தினம் விஜயகுமார் வாக்காளர்களுடன் உரையாற்றிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் சமயத்தில் இனந்தெரியாத நபர் ஒருவரால் கூட்டத்தின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஓர்ஒன்பது வயதுக்குழந்தை உட்பட இருவர் இச்சம்பவத்தில் காயமடைந்தனர். இனந் தெரியாத நபர்களினால் மூன்று கொலைமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தீவுப்பகுதிகளிலான அச்சுறுத்தல் மிரட்டுதல் என்பவற்றுடன் தொடர்புடையவை.

இராணுவத்தால் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட 10 அடையாள அட்டைகளை திருடியமை மற்றும் அச்சுறுத்தல், மிரட்டுதல் குற்றச்சாட்டுகள் ஈ.பி.ஆர்.எல் எவ்க்கு எதிராகக் கூறப்பட்டுள்ளன.

21 ஜனவரி 1998 இல் கைத்துப்பாக்கி கிரனேட் ஆகியவற்றுடனான நான்கு விடுதலைப்புலிச் சந்தேகநபர்கள் நான்கு ஈ.பி.ஆர்.எல். எவ் உறுப்பினர்களை தடுத்து வைத்ததுடன் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராக அச்சுறுத்தியும் எச்சரித்தும் உள்ளனர்.

4 ஜனவரி 1998 இல் இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் ஐந்து ஈ.பி. ஆர். எல். எப் உறுப்பினர்கள் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த போது இரு விடுதலைப் புலி சந்தேகநபர்கள் அவர்களை அணுகினர். கிரனேட்டுடன் ஒருவர் சில யார் தூரம் பின்னால் நின்ற போது மற்றவர் ஒரு ரைபிளுடன் அக் குழுவை நோக்கி முன்னேறினார். ஓர் ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர் இந்த நபரை இழுத்து சுடுகலத்தில் இருந்த தோட்டாவையும் அகற்றினார் இந்த இழுபறியில் வானத்தை நோக்கி இரண்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறப்படுகிற நபர் கிரனேட்டை எறியும்படி தனது சகாவை நோக்கி சத்தமிட்டார். இச் சந்தர்ப்பத்தில் அனைவரும் அவ்விடத்தை விட்டு அகன்று மறைந்தனர். கிரனேட் வெடித்த போது எவரும் காயமடையவில்லை.

யாழ்ப்பாணம், கோப்பாய், நெல்லியடி ஆகிய இடங்களில் அஞ்சல்ஊழியர்களுக்கு லஞ்சம் வழங்கி கொடுபடாத வாக்கு அட்டைகளை அரசியல் கட்சிகள் சேகரிக்க முற்பட்ட உறுதி செய்யப்படாத முறைப்பாடுகள் கூறுகின்றன.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் பாதுகாப்பு

இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற பௌத்த வணக்கஸ்தலம் கண்டியில் உள்ள தலதா மாளிகை. அங்கு புத்த பெருமானின் புனித சின்னம் வைக்கப்பட்டு, பூசித்துப் பேணிப் பாதுகாக்கப்பட்டும் வருகிறது.

தலதா மாளிகையை, நாட்டில் வாழும் சிங்கள பௌத்த மக்கள் மட்டுமன்றி, ஏனைய சகல மக்களுமே கீர்த்தியுடைய புண்ணிய ஸ்தலமாக, புனித இடமாகக் கருதுகிறார்கள்; மதிப்பளிக்கிறார்கள். குறிப்பாக இந்து மக்கள் தமது மதத்தில் உதித்த அனுபூதிமான்களில் ஒருவராகப் புத்த பெருமானைக் கொள்கிறார்கள்.

அத்தகைய தேசிய முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்த தலதா மாளிகை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்து விட்டது. இது கவலைக்குரியது. நாட்டின் சகல தரப்பு, மத மக்களினதும் மனங்களைப் புண்படுத்தியுள்ளது.

இலங்கையின் சுதந்திரதினப் பொன் விழாவின் பிரதான வைபவத்தைக் கண்டியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டதிலிருந்து, தலதா மாளிகை உட்பட எல்லாப் பகுதிகளும் தீவிர பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதாக அரசத் தரப்பில் தெரிவிக்கப்பட்டு வந்தது. தலதா மாளிகை தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று பந்தோபஸ்து பகுதியினர் சந்தேகிப்பதால் அங்கு நூறு வீதப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஓட்டைகள் இருந்ததாகவும் அது குறித்து விசாரிக்கப்படும் என்றும் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற பின்னர் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கூறியிருந்தார்.

இப்படி ஒரு நிலைமை, மக்களையும் உடைமைகளையும் அரசினால் காப்பாற்ற முடியுமா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

மக்களின் மதிப்புக்குரிய, வணக்கத்துக்குரிய புனித ஸ்தலம் ஒன்றைத் தாக்கிச் சேதப்படுத்துவதைக் கண்டிப்பதில் நியாயமிருக்கிறது. மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்குரிய வணக்க ஸ்தலங்கள், அவை எந்த மதத்துக்கு உரியனவாக இருப்பினும் அவற்றைச் சேதப்படுத்துவதோ, அழித்துத் தரை மட்டமாக்குவதோ ஏற்புடையதல்ல. அவற்றை யார் செய்தாலும் அது கண்டிக்கப்படவேண்டியதே.

மக்களினதும், அவர்களின் மத ஸ்தலங்கள் மற்றும் ஏனைய உடைமைகளினதும் பாதுகாப்பு அரசின் கைகளில் சிக்கியிருப்பது துரதிர்ஷ்டமானதும் மிகவும் கவலைக்குரியதும் ஆகும்.

வடக்கு- கிழக்கில் போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இங்கு மட்டுமே மக்களின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டு என்பதல்ல. நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்வதும் பாதுகாப்பானது அல்ல என்ற நிலை வளர்ந்து வருகிறது.

எந்த அவலமும் நேசிக்கின்ற இந்நிலைமை உருவாவதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். வன்செயல்களைக் கண்டிப்பதோடு மட்டுமன்றி அவற்றுக்கான உட்காரணங்கள், அடிப்படைக் காரணங்கள் என்னவென்பதை அறிந்து அவற்றைத் தீர்க்கும் அணுகுமுறையை எந்த அரசும் இதுவரை கைகொண்டதில்லை.

இந்த அரசேனும், இனியேனும் சரியான அணுகுமுறையைக் கையாண்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சரிவரச் செய்யவேண்டும்.

# வன்செயல்கள் தொடர்பாக 51 பேர் கண்டியில் கைது!

## நகரில் இயல்பு நிலை இன்னும் திரும்பவில்லை

கண்டி தலதா மாளிகை முன்பாக நேற்று முன்தினம் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக 51 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமையும் கண்டி நகரில் அலுவல்கள் யாவும் ஸ்தம்பித நிலையிலேயே காணப்பட்டன.

அரச, தனியார், நிறுவனங்களில் ஊழியர்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது.

பாடசாலைகள் இயங்கவில்லை. இ. போ. ச. தனியார் போக்குவரத்து சேவைகள் வழமைபோல் நடைபெற்றாலும் பயணிகள் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் யாவும் நேற்றும் பூட்டப்பட்டிருந்தன. தமிழர்கள் பெரும்பாலும் வீடுகளிலேயே முடங்கிக்கிடந்தனர்.

தமிழர் வாழும் பிரதேசங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ-21)

## வவுனியா கிராமசேவகர்கள் நேற்று சத்தியாக்கிரகம்

வவுனியா, ஜன. 27

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கிராமசேவையாளர்கள் நேற்று வவுனியா அரச செயலக வளாகத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தினர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா பிரதேச செயலக ஊழியர்களும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வவுனியா காத்தார் சின்னக்குளம் பிரிவு கிராமசேவையாளரான கோணேஸ்வரலிங்கம் என்பவர் கடந்த புதன்று வவுனியா செயலக வளவில் வைத்துக் கத்திக் குத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். காணி விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட தகராறின் காரணமாக அவர் கத்திக் குத்துக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கிராமசேவையாளரை கத்தியால் குத்திய நபர் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க உயரதிகாரிகள் தவறிவிட்டனர் எனத் தெரிவித்து அதனை ஆட்சேபித்தே கிராமசேவையாளர்கள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை நடத்தினர்.

பின்னர் வவுனியா அரச அதிபர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததை அடுத்து தமது போராட்டத்தைக் கிராம சேவையாளர்கள் கைவிட்டனர்.

(ஐ-164)

## தேர்தல் பணியாளர்களுக்கு நியமன கடிதங்கள் கிடைத்தன

குருநகர், ஜன. 27

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் தேர்தல் கடமை புரியும் பணியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் உரியவர்களுக்கு நேற்று தபால் மூலம் கிடைத்தன.

யாழ். தெரிவு அத்தாட்சி அலுவலரால் அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எழுதுநர்களாகக் கடமை புரிய உள்ளோர் தேர்தல் தினமான 29 ஆம் திகதி காலை தமக்குரிய வாக்குச் சாவடிகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட தேர்தல் உத்தியோகத்தர்கள், உதவித் தேர்தல் உத்தியோகத்தர்கள் ஆகியோரை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளோருக்கான விளக்கக் கூட்டங்கள் இன்று யாழ். செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

(ஐ-51-117)

## சைக்கிள் இலக்கத் தகடு

தென்மராட்சி, ஜன. 27

சாவகச்சேரி நகரப் பகுதியில் சைக்கிள் பரிசோதனைகள் நடத்தப்படுவதால் சாவகச்சேரி நகரசபையில் சைக்கிள் இலக்கத் தகடுகள் பெறுபவர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

(இ-117)

## வணக்கத் தலங்களை புனரமைப்பதற்கு நிதி

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். மாவட்டத்தில் வணக்கத் தலங்களைப் புனரமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இந்தத் தொகையை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதியிலிருந்து 33 இந்துக் கோயில்களும், 10 கிறிஸ்தவ தேவாலயங்களும் 3 மசூதிகளும், ஒரு பௌத்த கோயிலும் புனரமைக்கப்படவுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து வணக்கத் தலங்களைப் புனரமைக்க நிதி ஒதுக்கப்படுவதில்லை கடந்த ஆண்டு வரை இந்த விதி அமுலில் இருந்தது. இது குறித்து டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து யாழ். மாவட்டத்தில் வணக்கத் தலங்களைத் திருத்த பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பி. செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வணக்கத் தலங்களை புனரமைக்க மேலும் 20 கோடி ரூபா நிதி ஒதுக்குமாறு டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

(ஐ)

## ஊரெழு சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

ஊரெழு, உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் கிழக்கு முதலிய பகுதிகள் நேற்றுப் பிற்பகல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் ஊரெழு பர்வதவர்த்தினி அம்மன் கோயிலுக்கு அழைக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுமார் 3 மணி நேரத்தின் பின்னரே சோதனை முடிந்து மக்கள் தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-7)

## சிறந்த தொழிற்...

(நான்காம் பக்கத் தொடர்)

இலங்கை அதிபர் சேவை தரம் III சார்ந்த இவர் 1987-09-01 ஆந்திகதி யா/கல்வியன்காடு இந்து த. க. பாடசாலையில் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

1992-10-09 ஆம் திகதி யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் அதிபராகப் பதவியேற்று இன்றுவரை தனது கடமையை சரிவரப் புரிந்து ஓய்வுகால வாழ்வில் அடியெடுத்து வைக்கின்றார்.

கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டவர். இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிளை மாவட்டச் செயலாளராக பொறுப்புடன் தனது கடமைகளை ஆற்றிச்செய்தவர். நீதிக்காகப் போராடிய ஒரு சிறந்த தொழிற் சங்கவாதி என்பது ஊர்ஜிதமான உண்மை. ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவும் தொழில் உண்மை விருத்திக்காகவும் அயராது உழைத்த பெருந்தகையாளன் அவர்.

ஆ. சிறிக்குமாரன்
(அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

## அகதிகள் வருகை

குருநகர், ஜன 27

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக வள்ளங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 14 பேரும், நேற்று திங்கட்கிழமை 19 பேரும் குருநகர் இறங்குதுறைக்கு வந்தனர்.

இவர்கள் சாவற்காடு, பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

(ஐ-51)

## அமைய ஊழியர் சம்பளம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் அமைய சிற்றூழியர்களுக்கான சம்பளம் இம்மாதம் முதல் 120 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றும் அமைய சிற்றூழியர்களும் இந்த சம்பள அதிகரிப்பை இம்மாதம் முதல் பெறவுள்ளனர்.

(ஐ-ரீ)

**நாளை**

**தை 15**

புதன்கிழமை

திதி: அமாவாசை பிற்பகல் 12 48 வரை.

நட்சத்திரம்: திருவோணம் பின்இரவு 4 22 வரை.

சுபஹோரை: 5.06-6.36

ராகுகாலம்: 12.36-2.06

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரப்படி)

## கிணற்றில் விழுந்த யானையை மீட்க முயன்றவர் பலி!

வவுனியா, ஜன. 27

கைவிடப்பட்ட கிணறு ஒன்றினுள் வீழ்ந்த யானையை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் அதே கிணற்றில் தவறி வீழ்ந்து யானையால் மிதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

ஒட்டுசுட்டான் பெரிய சாளம்பன் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

கிணற்றில் வீழ்ந்த யானையை ஊர்மக்களின் உதவியுடன் மீட்க முயன்ற வேலு கேசகுலநாதன் என்பவரே பலியானவராவார்.

யானையால் மிதியுண்ட அவரை கிணற்றில் இருந்து யானை வெளியேறிய பின்னர் மீட்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்த போது அவர் அங்கு மரணமானார்.

(ஐ-164)

## இந்திய தூதரகம் சேதம்

சென்னை, ஜன. 27

தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு காரணமாக கண்டியிலுள்ள இந்திய உதவி தூதரகமும் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிமெந்து ஊழியர் சம்பளம்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் ஜனவரி மாத சம்பளக் கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## படையினருட...

(முதலாம் பக்கத்தொடர்)

வர் பற்றிய தகவலை நாம் கூறியதாகவும், படையினருடன் இணைந்து மக்களைத் தாக்கியதாகவும் புலிகள் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்பட்டமான பொய்யாகும். இது தேர்தலைக் குழப்பும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டதாக நாம் கருதுகிறோம்.

இதுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் புலி உறுப்பினர்களைத் தாக்கியும் கொலைப்பட்டும் உள்ள சம்பவங்களுக்கு யார் பின்னணி என்பதைப் புலிகளும் அறிவர்; நாமும் அறிவோம்; மக்களும் அறிவர்.

ஈ. பி. டி. பியினராகிய நாங்கள் இலங்கையின் எப்பாகத்திலும், எக்காலத்திலும் படையினருடன் இணைந்து புலிவேட்டையில் ஈடுபட்டதில்லை. புலிகளுடன் எமக்குள்ள முரண்பாடுகளை அரசியல் ரீதியாகவே சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

யாழ்.தீவுப்பகுதிகளில் எமது உறுப்பினர்கள் தமது தற்காப்புக்காகவே ஆயுதம் தாங்கியுள்ளனர். ஈ. பி. டி. பியினராகிய நாங்கள் முகாம்களில் தான் இருக்கின்றோம். படையினருடன் இணைந்து செயற்படவில்லை என்பதை மக்களும் அறிவர். படையினருடன் இணைந்து மக்களைத் தாக்கியதாக புலிகள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்பதையும் அங்குள்ள மக்கள் நன்கு அறிவர்.

ஏனைய கட்சியினரும் ஈ. பி. டி. பி. மீது திட்டமிட்ட பொய்ப் புகார்களையும், அபகீர்த்தி ஏற்படுத்தும் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். கொள்கை ரீதியாக முகம் கொடுக்க முடியாதவர்களும், கருத்து ரீதியாக எதிர்கொள்ள இயலாதவர்களும் கட்டுக்கதைகளைத் தேர்தல் பிரசாரமாக்கியுள்ளனர்.

இவற்றை நமது மக்கள் நம்ப மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. யாழ்ப்பாண மக்கள் உண்மைகளைப் புரிந்து கொள்ளும் மனோபக்குவம் உடையவர்கள்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலதா மாளிகைத் தாக்குதல்

# அரசே முழுப் பொறுப்பு!

## 'புளொட்' சார்பில் மாணிக்கதாசன் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 27

தலதாமாளிகைக் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கும் உயிரிழப்புகளுக்கும் அரசே பொறுப் பேற்கவேண்டும்.

'புளொட்' அமைப்பின் உப தலைவர் திரு. மாணிக்கதாஸன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தலதா மாளிகை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சுதந்திர தினபொன்விழா வைபவங்களும் அவை நடைபெறவுள்ள இடங்களும் புலிகளின் முக்கிய இலக்காக இருக்கும் என்பதை அரசு நன்கு அறிந்திருந்தது.

புலிகளின் முக்கிய இலக்கான இவ்வைபவத்தையும் இடத்தையும் பொதுமக்களின் புனித தலத்தில் தீர்மானித்தது அரசின் மிகப் பெரிய தவறாகும். இந்தக் குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கும் உயிரிழப்புகளுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும். அப்பாவிப் பொது மக்களைப் பலி கொள்ளும் குண்டுத் தாக்குதல்கள் தென் பகுதியில் நடத்தப்படும் காலங்களில் தான் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற அரசின் மீதான அழுத்தங்கள் சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்துக்காணப் படுகின்றது என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

இவ்விதமான அழுத்தங்களும், நெருக்கடிகளும் தென் பகுதிக் குண்டுத் தாக்குதலால் உருவாகாது. சுயமாகவே சிங்கள மக்கள் மத்தியில் இருந்து உருவாகி, அரசு மீதும் எதிர்க்கட்சி மீதும் பிரயோகிக்கப் பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். இதுவே சிங்கள இனத்தைப்பொறுத்த அளவிலும் நீண்ட கால நோக்கில் ஏற்புடையதாகும் — என்று தெரிவித்தார்.

## தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்யலாம்

யாழ்ப்பாணம், ஜன. 27

நாளை மறுதினம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின் போது எந்த விதமான தவறுகளும், குற்றங்களும் இடம்பெறுமாயின் 01—330648 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (உ)

## அவசர புனரமைப்புக்கு பிக்குமார் ஆட்சேபம்

### அலரிமாளிகையின் முன் ஆர்ப்பாட்டம்

குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த கண்டி தலதா மாளிகையின் புனரமைப்பு வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கும் அரசின் முடிவுக்குப் பௌத்த பிக்குமார் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா பௌத்த காங்கிரஸ் கட்டடத்துக்கு முன்பாக சுமார் 300 பௌத்த பிக்குமார் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர். அங்கிருந்து அலரி மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்ற அவர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளதாகத் தகவல் தெரிவித்தனர். அச்சமயம் ஜனாதிபதி அங்கு இருக்கவில்லை. ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிப் பொதுச் செயலாளர் டபிள்யூ. ஏ. கணேகம மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

தலதா மாளிகை சிங்கள பௌத்தர்களின் தேசிய சொத்து. அதனைப் பாதுகாப்பதில் அரசு தவறிழைத்துவிட்டது.

தலதா மாளிகையைப்பாதுகாக்கத் தவறியமைக்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தபதவி துறக்க வேண்டும்.

இவ்வாறு போராட்டத்தில் கலந்துகொண்ட பிக்குமார் கோஷம் எழுப்பினர்.

இதேவேளை—

தலதா மாளிகையை அவசரமாகப் புனரமைப்புச் செய்வதற்கு தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ணாவும் அரசிடம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரதினப் பொன்விழாவுக்காக அவசர அவசரமாக புனரமைப்பு செய்ய அரசு தீர்மானம் எடுத்தாலும் அதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின வைபவம் முக்கியம் அல்ல. 400 வருடங்கள் பழைமை வாய்ந்த புராதனம் பாதிக்கப்படாத வகையில் மிகவும் நுட்பமான முறையில் ஆராய்ந்துதான் புனரமைப்புப் பணி செய்யப் படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை— அமைச்சர்கள் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோர் தியவதன நிலமேயுடன் புனரமைப்பு தொடர்பாக ஆராய்ந்தனர்.

குறுகியகால புனரமைப்பு, நீண்டகால புனரமைப்பு என இருகட்டங்களில் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டது.

மழை பெய்யக்கூடிய கால நிலை இருப்பதால் உடனடியாக கூரைகள் போடப்பட வேண்டும் என தியவதன நிலமே வலியுறுத்தினார்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமானி அறிவித்தல் வெளியாகி விட்டதா என்ற விவரத்தை நேற்றிரவு வரை அறிய முடியவில்லை.

இத்தடை உத்தரவின் விளைவு என்ன? எத்தகைய நடவடிக்கைகளை இந்த உத்தரவு கட்டுப்படுத்தும்? — என்பன போன்ற தகவல்களையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

இந்தியாவிலும், அமெரிக்காவிலும் வெவ்வேறுவகையான சட்ட அம்சங்கள், கட்டுப்பாடுகளுடன் புலிகள் இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி தலதாமாளிகையின் மீதான குண்டுத் தாக்குதலின் தொடராகவே புலிகள் இயக்கம் தற்போது தடைசெய்யப் பட்டிருக்கின்றது. (உ 9-10-21)

## மகாபோதி..

(முதலாம் பக்கத் தொடர்)

கண்டியின் தலதா மாளிகை குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகாபோதி அமைந்துள்ள இடத்தில் இருந்து 500மீற்றர் தொலைவுக்கு அப்பாலேயே சகல வாகனங்களும் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாபோதியை வழிபடச் செல்வோர் கடும் சோதனையின் பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர் [ஐ-21]

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கு பொலீஸார், இராணுவத்தினர், விமானப்படையினர், கடற்படையினர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பை வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலதாமாளிகை, நாக தேவாலயம் ஆகியவற்றின் சேதமுற்ற பகுதிகளைத் திருத்தவென மக்கள் வங்கி நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இராணுவத்தின் பொறியியல் பிரிவின் உதவியுடன் 3 ஆயிரம் பேர் புனரமைப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## பிரசாரம் நேற்றுடன் முடிவு ஒலிபெருக்கிகள் முழக்கம்

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான பிரசாரத்தின் இறுதித் தினமான நேற்று தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் முழுமூச்சுடன் பிரசாரப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன.

யாழ் நகரிலும் குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று முழு நாளும் ஒலிபெருக்கிகள் முழங்கின இதனால் பெரும் இரைச்சல் எழுந்தது.

ஒலிபெருக்கிகள் கட்டப்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு எழுப்பிய கோஷங்கள் யாழ். நகரின் மூலை முடுக்கு எங்கும் எதிரொலித்தன.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் களத்தில் உள்ள தமது எதிர்க் கட்சிகளைக் கடுமையாகச் சாடும் கோஷங்களையும் பரவலாகக் கேட்க முடிந்தது.

இவற்றை விடசினிமாப்பாடல்கள் பலவும் ஏட்டிக்குப் போட்டியாக ஒலித்தன

'நாளை நமதே', 'அச்சம் என்பது மடமையடா', 'நெஞ்சே உன் ஆசை என்ன', 'நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்' போன்ற வரிகளுடன் தொடங்கும் பாடல்களே கட்சிகளின் வாகனங்களில் விடாமல் ஒலித்தன. (ஐ-5)

### களுவாஞ்சிக்குடியில் நேற்று

## 2 கான்ஸ்டபிள்கள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் களுவாஞ்சிக்குடியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் பலியாகினர். மற்றொருவர் காயமடைந்தார்.

பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தேநீர் கடை ஒன்றுக்கு சென்று கொண்டிருந்தவேளை இவர்கள் வழிமறித்துச் சுடப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது போலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் சிவிலியன் ஒருவர் காயமடைந்ததாகவும் — வர்த்தகர்கள் இருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை நடத்திய புலிகள் ரீ - 56 ரகத்துப்பாக்கி ஒன்றை அபகரித்துச் சென்றுள்ளனர். (ஐ-21)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

பேச்சு நடத்தினார். அங்கு இரண்டரை மணி நேரம் பேச்சு நீடித்தது.

யுத்தங்களின் போது காணாமற்போனோர் உயிருடன் உள்ளனரா? அல்லது இல்லையா? — என்பதை புலிகளுடன் பேசி திட்டவட்டமாக அறிந்து வரும்படி ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் கோரினர் தமது நடவடிக்கை முறைகள், செயற்பாடுகளைச் செஞ்சிலுவை அதிகாரிகள் விளக்கினர்.

அச்சமயம்—மதியம் 12.30 மணியளவில் அலுவலகத்துக்கு வெளியே பதற்றம் கூடியது. திடீரென ஆர்ப்பாட்டக்காரர்கள் அலுவலகம் மீது கல் வீசினர். இதனையடுத்து அங்கு விரைந்து வந்த பொலீஸார் அலுவலகக் கதவுகளை மூடி அங்கு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் முன்னாள் அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி, எம். பியான ரவி கருணநாயக்கா ஆகியோர் வாகனம் ஒன்றில்வந்திறங்கி, ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றினர்.

பிற்பகல் 4 மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஐ-21)


## வரவேற்கின்றோம்

யாழ்ப்பாணம்
இந்து ஆரம்ப பாடசாலையின்
புதிய அதிபராக
பதவியேற்றிருக்கும்
திரு. வே. ஞானகாந்தன்
அவர்களை
வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்
மற்றும் பாடசாலைச் சமூகத்தினர்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

[சி/2727]

## ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி.

எமது கல்வி நிறுவனத்தில் முழுமையாகக்கல்விபயின்று 1997 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்வரும்
மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| இ. ஷம்பிகா | சோ. லவந்தினி | ந. துஷ்யந்தினி |
| க. சஜினி | கா. ரதிகா | கு. சிந்துஷா |
| சி. விஜிகரன் | மு. தர்சிகா | சி. அபிராமி |
| ப. சஜிதா | த. சியாமளா | இ. கார்த்திகா |
| | ச. தினேஷ்குமார் | |

1998 ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.

A/L 99

கணக்கியல் — பங்குடமை

ஆரம்பம்: 31 – 01 – 1998 பி. ப. 3-00 மணி

(52907) நிர்வாகி, ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

குமாரவேலு பராஜசேகரம்
(இளைஞர் சேவை அதிகாரி)

கடமையில் கண்ணாய்
கண்ணியமே சுவாசமாய்
பண்பு இதயமாய் இயங்கிய
இளைஞர் சேவை அதிகாரி
குமாரவேலு பராஜசேகரம்
அவர்களுக்கு
எம் இதய அனுதாபங்கள்!

கைதடி மேற்கு
பராசக்தி இளைஞர் கழகம்,
கைதடி.

கைதடி மேற்கு,
கைதடி.

[சி/2725]

## சோலை வீடியோ விஷன்

பிரதானவீதி, நெல்லியடி,

எம் ஜி ஆர்.
சிவாஜிகணேசன் நடித்த
பழைய திரைப்படங்கள்
CD பிரதிகளாக
எம்மிடம் வாடகைக்கும்,
விலைக்கும்
பெறக் கொள்ளலாம்,
(52908)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் [illegible] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] 27-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org